பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 09 2023 12 40

வியாழக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மகளிர் இடஒதுக்கீடு மசோதா இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான விவாதம் தற்போது நடைபெற்று வருகிறது.

2. மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள மகளிர் மசோதா-வின் மூலம் மகளிருக்கு புதிய உத்வேகம் கிடைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. விண்வெளித்துறையில் சந்திரயான்-மூன்றின் பயணம் உலகின் கவனத்தை இந்தியாவின் மீது திருப்பி இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

4. ஐ நா பாதுகாப்புக் குழுவில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டுமென்று பிரிட்டன் வெளியுறவுத்துறை செயலர் ஜேம்ஸ் **Cleverly** வலியுறுத்தியுள்ளார்.

5. ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

<u>---- *இனி விரிவான செய்திகள்*</u> ---

**[]<<<>>>[]**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெஹ்வால் இந்த மசோதாவை அறிமுகம் செய்தார்.

மகளிரை அதிகாரப்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மசோதா, அடுத்த 25 ஆண்டுகளுக்கு இந்தியாவை வலிமையானதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக திரு மெஹ்வால் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மகளிருக்கான பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி இருப்பதாகவும், உஜ்வாலா யோஜனா, முத்ரா கடனுதவி திட்டம் போன்றவற்றால் மகளிர் அதிக அளவில் பயன்பெற்றிருப்பதாக அமைச்சர் கூறினார்.

அமைச்சரின் உரைக்குப் பின்னர், பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் மகளிர் இடஒதுக்கீடு மசோதா விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி வருகின்றனர்.

**[]<<<>>>[]**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதை அடுத்து நாட்டில் உள்ள மகளிருக்கு புதிய உத்வேகம் கிடைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மக்களவை இன்று காலை கூடியதும் பேசிய பிரதமர், இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதால் மகளிரை அதிகாரப்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும், நாடு புதிய வரலாற்றை படைக்கும் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கு ஒத்துழைப்பு அளித்த கட்சிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதகாவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இது பொன்னான தருணம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

இந்திய விண்வெளித்துறையில் மாபெரும் சாதனையாக கருதப்படும் நிலவிற்கான சந்திரயான்-மூன்றின் பயணம் உலகின் கவனத்தை இந்தியாவின் மீது திருப்பி இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் விண்வெளித்துறையின் சாதனைகள் குறித்து நடைபெற்ற விவாதத்தில் பேசிய அவர், நிலவின் தென்துருவப் பகுதியில் முதல் முறையாக இந்த சாதனை நிகழ்த்தப்பட்டிருப்பதாகக் கூறினார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் இந்த சாதனையை மேற்கொள்ளாத நிலையில், இந்தியா வரலாறு படைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய விஞ்ஞானிகளுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும், இந்த சாதனையை இந்தியர்கள் அனைவரும் போற்ற வேண்டுமென்றும் திரு ராஜ்நாத்சிங் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நிலவில் தரை இறங்கியுள்ள சந்திரயான்-மூன்று விண்கலத்தின் லேண்டர் மற்றும் ரோவர் கருவிகளுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவில் சூரியன் மறைந்த பின்னர் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட இந்த கருவிகளின் செயல்பாடுகள் சூரியோதயத்திற்குப் பின்னர் இன்று மீண்டும் இயங்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலவின் தென்துருவத்தில் இறக்கப்பட்டுள்ள இந்த கருவிகளை இயக்குவதற்கு இஸ்ரோவின் கட்டுப்பாட்டு அலுவலகங்கள் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

அடுத்த 14 நாட்களுக்கு சூரிய ஒளி கிடைக்கும் என்பதால், இயக்கும் நடைமுறைகள் ஆராயப்படும் என்று இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவில் சூரியன் மறைந்த பின்னர் மைனஸ் டிகிரி குளிர் நிலவுவதாகவும், அந்த சமயத்தில் பேட்டரிகளின் வெப்பம் அதிகமாக குறையும் வாய்ப்பு உள்ளதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவில் ஏற்கனவே சல்பர் மற்றும் கனிமப் பொருட்கள் இருப்பதை லேண்டர் மற்றும் ரோவர் கருவிகள் தெரிவித்துள்ள நிலையில், பேட்டரிகள் இயங்கத் தொடங்கும் போது கூடுதல் விவரங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[]<<<>>>[]

நாட்டில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமைப்படைத்தல் துறைகளில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த விருது நான்கு பிரிவுகளுக்கு வழங்கப்படும்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த புதுமைப்படைத்தலுக்கு தகுதி வாய்ந்த தனிநபர்களுக்கும், குழுவினருக்கும் விருதுகள் வழங்கப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14-ஆம் தேதி முதல் பிப்ரவரி 28-ஆம் தேதி வரை இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும், தேசிய தொழில்நுட்ப தினமான மே மாதம் 11-ஆம் தேதி அன்று விருதுகள் வழங்கப்படும் என்றும் அரசு கூறியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தேசிய விண்வெளி தினமான ஆகஸ்ட் மாதம் 23-ஆம் தேதி இந்த விருதுகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ நா பாதுகாப்புக் குழுவில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டுமென்று பிரிட்டன் வெளியுறவுத்துறை செயலர் ஜேம்ஸ் **Cleverly** வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலக அளவில் வளரும் நாடுகளுக்கு ஐ நா முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று கூறினார்.

மண்டலங்கள் வாரியாக வளர்ந்து வரும் நாடுகளை அடையாளம் கண்டு அதனை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கு ஐ நா நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

இந்த குழுவில் பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அவர் கேட்டுக் கொண்டார்.

உலக அளவில் ஏற்பட்டுள்ள புவி அரசியல் சூழலுக்கு இடையே ஆப்ரிக்க நாடுகள் முக்கியத்துவம் பெற்று வருவதாகவும், அதற்கான அரங்கை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது சீன பயணம் குறித்து உரையில் குறிப்பிட்ட அவர், சீனாவின் **Xin jing** மாகாணத்தில் வசித்து வரும் இஸ்லாமிய சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

ஹாங்காங் மற்றும் தைவானில் சீனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தோல்வியை கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதும், அதனுடன் நட்புறவு பாராட்டும் நாடுகள் மீதும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் தவறான எண்ணம் கொண்டிருப்பதாக ஜேம்ஸ் க்ளவர்லி கூறினார்.

கடந்த 18 மாதங்களில் ரஷ்யா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சிம்பெக்ஸ் எனும் சிங்கப்பூர் - இந்திய கடற்படை கூட்டுப்பயிற்சி இன்று முதல் வரும் 24-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

வங்கக்கடலில் விசாகப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் பல்வேறு வகையிலான பயிற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

துறைமுகத்திற்கு அருகே-யும், நடுக்கடல் பகுதிகளிலும் இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

போர் விமானங்கள், நீர்மூழ்கி கப்பல் ஒத்திகைகள் மற்றும் அதிநவீன வகையிலான பயிற்சிகளும் இதில் மேற்கொள்ளப்படும்.

ரன் விஜய், கவரட்டி போர்க் கப்பல்களும், சிந்து கேசரி நீர் மூழ்கி கப்பல், கொசைதான் ரக போர் விமானங்கள் இந்த பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நவராத்ரி பண்டிகைக்கு முந்தைய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்தியாவின் மேற்கு மாநிலங்களில் ஹில்சா மீன் வகைகளை உண்ணும் பழக்கம் இருந்து வருகிறது.

பங்ளாதேஷில் பத்மா மற்றும் மேக்னா நதிகளில் அதிக அளவில் காணப்படும் இந்த வகை மீன்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய அந்நாட்டு அரசு அனுமதி அளித்துள்ளது.

இதன்படி நாலாயிரம் மெட்ரிக் டன் ஹில்சா மீன்கள் ஏற்றுமதி செய்யப்படும் என்று அந்நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

79 ஏற்றுமதியாளர்கள் ஹில்சா வகை மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பங்ளாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசினாவிடம், மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தாபானர்ஜி வேண்டுகோள் விடுத்ததன் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இயற்கை பாதுகாப்பில் பொதுமக்களும் பங்கேற்பதற்கு வசதியாக வனவிலங்குகளை தத்தெடுப்பதற்கு சேலம் மாவட்ட வனத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

குறும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவில் உள்ள 22 வகையான விலங்குகளை பாதுகாப்பதற்காக தத்தெடுப்பு நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருவதாக உயிரியல் பூங்காவின் உதவி இயக்குநர் திரு செல்வகுமார் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - செல்வக்குமார் ) ---33 செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்திய கடலோர காவல்படையின் சமுத்திர பிரஹாரி கப்பல் தாய்லாந்தின் **khlong Toei** துறைமுகத்தில் மாசு கட்டுப்பாடு தொடர்பான பயிற்சியை மேற்கொண்டது.

இந்த பயிற்சியில் தாய்லாந்தின் கடலோர காவல்படையும் இணைந்து கொண்டது.

கடலில் எண்ணெய் கசிவு, மாசு ஏற்படுதல், போன்ற பல்வேறு ஆபத்துக்களை எதிர்கொள்வது தொடர்பான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தாய்லாந்தின் பட்டாய கடற்கரையில் இந்திய தூதரக பிரதிநிதிகள், தேசிய மாணவர் படை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் தூய்மைப் பணிகளை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பரவலாக இன்றும் நாளையும் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று இரவு முதல் மிதமான மழை பெய்து வருகிறது.

தென்மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியின் 10வது சீசன் இன்று தொடங்குகிறது.

இப்போட்டி 11 நகரங்களில், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை நடைபெறுகிறது.

கொச்சியில் இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் கேரள அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் கால்பந்து ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இந்திய நேரப்படி இப்போட்டி பிற்பகல் ஒன்று முப்பதுக்கு தொடங்குகிறது.

மகளிர் கால்பந்து ஆட்டத்தில் இந்தியா இன்று சீன தைபேயையும் எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 5 மணிக்கு தொடங்குகிறது.